பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 13 சனிக்கிழமை 01.10.2022 கதிர் 217

## உலக நாடுகளில் இன்று சிறுவர், முதியோர் தினம்



உலக ரீதியில் சிறுவர் மற்றும் முதியோர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படு கின்றது.

சிறுவர்களுக்கு இடையே புரிந்துணர்வையும் பொதுநிலைப் பாட்டையும் 2

## சிறுவர்கள், முதியோர்களை பேரன்புடன் பராமரியுங்கள்

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



அனைத்துசிறுவர்களையும்முதியவர்களையும் நம் அன்புக்குரியவர்களாகக் கருதி, அவர்களை அன்புடன் பராமரிக்கும் ஒரு சகாப்தத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதிபூணுவோம் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 2

## வல்வெட்டித்துறையில் தீக்காயங்களுடன் கணவனும் மனைவியும் சடலங்களாக மீட்பு

### பொலிஸார் பல கோணங்களில் தீவிர விசாரணை





யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை - நெடியகாடு பகுதியில் உள்ள வீடொன்றில் கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இன்றுஅதிகாலை4.15மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 2

## தமிழ் மக்களுக்கென்று பிரச்சினைகள் இல்லை

### மீண்டும் சர்ச்சையைக் கிளப்பும் வீரசேகர



நாட்டில் தமிழ் மக்களுக்கென்று பிரச்சினைகள் எதுவும் இல்லை. அவர்கள் தாமாகவே பிரச்சினைகளைத் தேடுகின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று வெளிவரும் செய்திகளை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ் மக்களுடன் அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களிடம் தெரிவித்திருந்தனர். 8

## வீழ்ச்சிப் பாதையில் அரசு; பொதுத்தேர்தலே ஒரே வழி

### கம்மன்பில எம்.பி. சுட்டிக்காட்டு

இந்த அரசின் போக்குச் சரியில்லை. அது வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது. நாட்டில் அரசியல், பொருளாதாரம் என எந்தப் பிரச்சினைகளுக்கும் இந்த அரசால் தீர்வு காணமுடியாது. 8



## தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?

### வவுனியாவில் உறவுகள் போராட்டம்




(வவுனியா நிருபர்)

5 வயது சின்னஞ்சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?, தமிழ்குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா? போன்றகேள்விக்கணையுடன் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 8

## போராட்டத்தை வழிநடத்தியோரை உடனடியாகக் கைது செய்யுங்கள்

### நாமல் எம்.பி. வலியுறுத்து



அரசுக்கு எதிரான காலி முகத்திடல் போராட்டத்தை வழிநடத்தியவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். 2

## நடுத்தெருவில் இலங்கை; எந்த நாடும் உதவமாட்டாது

### சஜித் அணி தெரிவிப்பு



சர்வதேச சமூகம் இலங்கையைக் கைவிட்டு விட்டது. எந்த நாடும் எமது நாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்கும் நிலைப்பாட்டில் இல்லை. 8

## இன்று முதல் புதிய வரி அறிமுகம்




நாட்டில் சமூக பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கும் வகையிலான புதிய வரி இன்று முதல் அமுல்படுத்தப்படு கின்றது. இதன்மூலம், 140 பில்லியன் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது. 2

## போதைப்பொருள் பாவனைக்கு அடிமையென மாணவர்களைக் கேவலப்படுத்துகின்றார்கள்!

### ஊடகங்கள் மீது வடக்கு கல்வி அமைச்சின் செயலர் பாய்ச்சல்



ஊடகங்களைப் பார்த்தால் வெட்கமாக இருக்கின்றது. எமதுமாணவர்சமுதாயத்தைக் கேவலப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது வடக்கு மாகாணம் போதைப்பொருளுக்கு அடிமையான கூட்டம் என்று பட்டம் சூட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அது ஒரு பகுதியாக போய்க்கொண்டிருக்கட்டும். 2

## இணைய விளையாட்டால் வடமராட்சி பிரதேசத்தில் 2 சிறுவர்கள் தற்கொலை

யாழ்ப்பாணம், வடமராட்சி பிரதேசத்தில் இந்த வருடம் இது வரையான காலப்பகுதியில் இரண்டு சிறுவர்கள் இணைய விளையாட்டால் (வீடியோ கேம்) தவறான முடிவு 8

## போதைப் பாவனையை மறைத்தால் இனிமேல் ஒழுக்காற்று நடவடிக்கை

### வடக்கு மாகாண ஆளுநர் எச்சரிக்கை



வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையை மறைக்கும் அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று 2

## சிறுவர்கள், முதியோர்கள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விடுத்துள்ள உலக சிறுவர் மற்றும் முதியோர் தின வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமகால சமூகத்தில் வாழும் பெரியவர்களான நாம் அணுகக்கூடிய உலகம் அல்ல சிறுவர்களின் உலகம். அது மிகவும் எளிமையானது. அவர்கள் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள். பெரியவர்களாகிய நாம் இதை புத்திசாலித்தனமாகப் புரிந்துகொண்டு அவர்களுக்கான உன்னதமான உலகத்தை உருவாக்க வேண்டும்.

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர், சிறுவர்கள் வாழ்ந்த சமூகப் பின்னணியில் இருந்து தற்போதைய சமூகப் பின்னணி மிகவும் வித்தியாசமானது என்பது தெளிவாகிறது.

இத்தகைய பின்னணியில், நாட்டின் அனைத்து சிறுவர்களுக்கும் சரியான அளவு கலோரி அடங்கிய ஊட்டச்சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரச தலைவர் என்ற வகையில் எனது கடமையாகும்.

நாட்டின் தற்போதைய தலைமுறைக்கு போக்கான உணவை வழங்குவதும், எதிர்கால சந்ததியினருக்கு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதுமே இத்தருணத்தில் எனது நோக்கமாகும்.

நான் முன்வைத்த கொள்கை அறிக்கையின் பிரகாரம், ஏழை மற்றும் வசதி குறைந்தவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு நிறை உணவு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் முதற்கட்டமாக 1,080,000 பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவாகப் போக்குள்ள நிறை உணவு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறன. இது சுகாதார அமைச்சின் ஊட்டச்சத்து நிபுணர்களின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமாகும்.

அதேபோன்று, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பு இல்லாத குடும்பங்களுக்கும் மேலதிக கொடுப்பனவு மற்றும் மாதாந்த கொடுப்பனவு வழங்குவது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சிறுவர்களின் அழகிய குழந்தைப் பருவத்தையும், நமது நாட்டின் வளர்ச்சிக்காக அளவில்லா தியாகங்களைச் செய்த முதியோர் சமூகத்தையும் பராமரிப்பது நமது கடமையாகும். அது நமது கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது.

உணவு, கல்வி, விளையாட்டு, அழகியல், ஓய்வு, உறக்கம், மனநலம், உடல் ஆரோக்கியம் போன்றவை சிறுவர்களின் தேவைகளில் சிலவாகும். அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் கலாசார ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் தேவைகளை தாமதமின்றி நிறைவேற்றுவது, அரசாங்கத்தைத் தவிர பெற்றோர், ஆசிரியர் மற்றும் சிவில் அமைப்புகளின் பொறுப்பாக நான் கருதுகிறேன்.

அனைத்து சிறுவர்களையும் முதியவர்களையும் நம் அன்புக்குரியவர்களாகக் கருதி, அவர்களை அன்புடன் பராமரிக்கும் ஒரு சகாப்தத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதி பூணுவோம் - என்றுள்ளது.

## உலக நாடுகளில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு 14.12.1954 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்று தொடங்கி இன்று வரை உலகம் முழுவதிலும் ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர்களுக்குரிய தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

இதேவேளை, இன்று உலக முதியோர் தினமும் கொண்டாடப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோர்களாகக் கருதப்படுகின்றனர்.

முதியோர்களும் தமது காலத்தில் குழந்தைகள் சிறுவர்கள் போல் உள்ளதாலோ என்னவோ இந்த இரு தினங்களும் ஒரே நாளில் கொண்டாடப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வல்வெட்டித்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை - நெடியகாடு, ஏ.ஜி.ஏ. ஒழுங்கையைச் சேர்ந்த சரவணபவா ரஞ்சித்குமார் (வயது - 30), அவரது மனைவி கிருசாந்தினி (வயது - 26) என்ற இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இளம் தம்பதி உறங்கிய அறையில் தீபற்றிஎரிவதைக்கண்டவீட்டிலிருந்தவர் அறையை உடைத்து உள்நுழைந்த போது இருவரும் தீயில் எரிந்து சடலங்களாகக் காணப்பட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பல கோணங்களில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலும் கூறினர்.

## போராட்டத்தை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிமடை பகுதியில் நடைபெற்ற அரசியல் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

போராட்டக்காரர்களை இலக்கு வைத்தே புதிய புனர்வாழ்வு சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டையும் நாமல் நிராகரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்ட அலையைப் பார்த்து அப்பாவி இளைஞர்கள் களத்துக்கு வந்தனர். மேலும் சில இளைஞர்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர். அவ்வாறான இளைஞர்களைத் தண்டிப்பது தவறு. அவர்களைச் சிறையில் அடைக்காமல் சமூகமயப்படுத்த வேண்டும். ஆனால், போராட்டத்தை வழிநடத்தியவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் - என்றார்.

## போதைப்பொருள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைப் பெரிதாக்கி போதைப்பொருளுக்கு அடிமையாக விட்டார்கள் என்றெல்லாம் பெரிய பட்டம் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

- இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியின் பாடசாலை கட்டடத் தொகுதி திறப்பு விழா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கேற்புடன் நடைபெற்றது. நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

பல சிரமங்களுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் எமது வடக்கு மாகாணம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றாவது இடத்திலிருந்து முதலிடத்துக்கு முன்னேறும் வகையில் எங்கள் மாணவர்கள் திட்டமிட்டு கற்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கும்போது அதிகளவான மாணவர்கள் வர்த்தக மற்றும் கலைத் துறையைத்தான் தெரிவு செய்து அதில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருக்கின்றார்கள்.

அவர்களுடைய எதிர்காலம் சற்றுக் கேள்விக்குறியானதுதான். தொழில்நுட்பம் சார்ந்த கல்வியைத் தெரிவு செய்வதன் ஊடாக எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றியமைக்கலாம்.

பட்டதாரியானால்வேலைகிடைக்கும் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். எந்தவொரு காலத்திலும் இனி பட்டதாரிக்கு வேலை கொடுப்பதற்கு அரசு தயாராக இல்லை. நீங்களாகத்தான் வேலைகளைத் தேடிக்கொள்ள வேண்டும். பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்கள் அண்மைக்காலமாக ஏன் இப்படி செய்தி போடுகின்றார்கள் என்று தெரியவில்லை. பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களைப் பார்ப்பதற்கே வெட்கமாக இருக்கின்றது.

வடக்கு மாகாணம் போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டதாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அதில் உண்மை இருக்கின்றது. ஆனால், தொடர்ச்சியாகக் கேவலப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்களையும் எங்களுடைய வடக்குமாகாணத்தையும்எங்களுடைய பண்பாட்டையும் மிகக் கேவலமாக அவர்கள் சித்தரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையிலேயே எங்களுடைய மாணவர்களுக்கு நாங்கள் நல்ல விடயங்களைப் புகட்ட வேண்டும். எங்களுடைய பாடசாலை ஆசிரியர்கள் நேரமில்லாவிட்டாலும் அதற்கென ஒரு நேரம் எடுத்து நல்ல விடயங்களை மாணவர்களுக்குச்சொல்லிக் கொடுங்கள்.

இரண்டு பாட வேளைகள் உள்ள ஆசிரியர்கள் ஒரு பாட வேளையாவது மாணவர்களுக்குப் போதைப்பொருள் பாவனை அல்லது பொது விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் என்ன ஏற்படும் என்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

நாங்கள் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வைதொடர்ந்து முன்னெடுத்தால் மாணவர்களுக்கு அதில் ஆர்வம் வந்துவிடும். தெரியாதவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தது போலும் அமைந்துவிடும். மாணவன் அதை அறிவதற்கு முற்படுவான். அவ்வாறான நிகழ்வை நாங்கள் மாணவர்களுக்குச் சொல்லக்கூடாது.

நாங்கள் தீமைகளை மட்டுமே சுட்டிக்காட்ட வேண்டும். போதைப்பொருள் பயன்படுத்தினால் என்ன நடக்கும், உயிருக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பவற்றைச் சொல்லிக் கொடுங்கள் - என்றார்.

## போதைப் பாவனை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை மேற்கொள்ள விவரங்கள் சேகரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைக்கு அவப்பெயர் ஏற்படும் என வடக்கு பாடசாலைகளில் போதைப் பாவனையில் ஈடுபடும் மாணவர்களது தரவுகள் மறைக்கப்படுகின்றன எனக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய வடக்கு மாகாண ஆளுநர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது குறித்து ஆளுநரால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான அவசர அறிவுறுத்தல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மறு அறிவித்தல்வரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள்களின் பயன்பாடு தொடர்பான விவரங்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநரது செயலாளருக்கு இணைப்புச் செயலாளர் ஊடாக வழங்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையும் மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்வதோடு இரகசியத் தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்கள் கண்டறியப்பட்டு அவர்களை சிகிச்சைக்குட்படுத்தவும் அல்லது புனர்வாழ்வு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் போதைப்பொருள் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சினால் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து சம்பவங்களை நிரல்படுத்தி இணைப்புச் செயலாளர் ஊடாக ஆளுநரின் செயலாளருக்குப் பிரதியுடன் ஆளுநருக்கு வழங்குவதற்கு சமர்ப்பிக்க முடியும்.

மேலும் வடக்கு சுகாதார அமைச்சானது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைப்பொருள் பாவனை மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பாக அவதானிப்புக்களைச் செலுத்தி உறுதி செய்து விவரங்களை ஆளுநரின் இணைப்புச் செயலாளர் உடன் இணைந்து பணியாற்றி ஆளுநருக்கு அட்டவணைப்படுத்த வேண்டும்.

இது தொடர்பில் கள நிலைவர அறிக்கையை ஆளுநர் செயலாளர் உரிய உத்தியோகத்தர்களை ஒன்றுகூட்டி ஒவ்வொரு 5 கிழமைக்கு ஒரு தடவை உரிய நடவடிக்கைக்கும் பரிசீலனைக்குமாக அறிக்கை செய்தல் வேண்டும் -என்றுள்ளது

## இன்று முதல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், இந்தப் புதிய வரி விதிப்பால், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மேலும் உயரக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான வரிகள் அரசுக்கான வருமானத்தை ஈட்டுவதற்குத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொரோனாத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி, 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், அதன் அமுலாக்கம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இதன் கீழ் 120 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருடாந்த புரள்வு மீது 2.5 வீதம் வரி அறவிடப்படும்.

இருப்பினும், மருந்துகள், பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, உள்ளூர் உற்பத்தியாளர் அல்லது உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதிய பால், மூல இலைகள், இலவங்கப் பட்டை அல்லது உள்ளூர் உற்பத்தியாளர் அல்லது உற்பத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட இறப்பர் உள்ளிட்ட சில பொருட்களுக்கு சமூக பாதுகாப்பு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீர் மின்சார உற்பத்தி அல்லது மாற்று மின்சாரத் தயாரிப்பு, மருத்துவ சேவைகள், நீர் வழங்கல், சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து, தையல் சேவைகள், பயண சேவைகள், ஆயுள் காப்பீட்டு வணிகங்கள், திரையரங்குகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் பணம் செலுத்தும் சேவைகள் உட்பட பல சேவைகளுக்கு இந்தப் புதிய வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

-விளம்பரத்திற்கு-
-தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சிங்களத்தின் அறிவு மேதைகள்

முழு உலகத்தையுமே முட்டாள்களாகக் கருதும் பிரகிருதிகளிடம்தான் இலங்கையின் ஆட்சி பீடத்தை அவ்வப்போது தென்னிலங்கை மக்கள் கையளித்து வந்திருக்கின்றனர் என்ற உண்மை இப்போது நிரூபணமாகி வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த சுமார் இரண்டரை வருட காலத்தில் அவரது வலது கை போல செயல்பட்ட அந்நேர அமைச்சரும், முன்னாள் படைத்தளபதியுமான சரத் வீரசேகர இப்போது பகிரங்கமாக வெளியிட்டிருக்கும் 'உண்மை', எத்தகைய அறிவார்ந்த நிலையில் உள்ளோர் அரசியல் தலைவர்களாகவும், படைத் தளபதிகளாகவும் இந்த நாட்டில் பதவியில் இருந்திருக்கிறார்கள் என்ற அளவீட்டுக்கு – மதிப்பீட்டுக்கு – நல்ல அளவு கோலாகக் கிட்டி இருக்கின்றது.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் மக்களுடன் விரைவில் பேச்சை ஆரம்பிப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனாவும் கூறி இருக்கின்றனர்.

அது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கூட்டமைப்புத்தலைவர் இரா.சம்பந்தன் பேச்சுக்களை இதயசுத்தியுடன் அரசு நடத்த வேண்டும் என்றும், இனியும் தமிழ் மக்களை அரசு தொடர்ந்து ஏமாற்றக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

இந்த மூன்று தலைவர்களின் கருத்துக்களுக்கும் பதில் அளிக்கும் வகையில் பதில் கருத்து வெளியிட்டுள்ள சரத் வீரசேகரவின் நிலைப்பாடு இந்த மூன்று தலைவர்களுமே விடயம் அறியாத, விவேகமற்ற முட்டாள்கள் என்ற தொனியில் அமைந்துள்ளது.

"நாட்டில் தமிழ் மக்களுக்கு என்று பிரச்சினை எதுவுமே இல்லை. தமிழர்கள் தாமாகவே பிரச்சினைகளைத் தேடுகின்றனர்" – என்று 'அதிகம் அறிவுள்ள' முன்னாள் படைத்தளபதி சரத் வீரசேகர கண்டுபிடித்துக் கருத்து கூறியிருக்கிறார். இவ்விடயத்தை ஒட்டி அவர் கூறியுள்ள கருத்துக்களைப் பார்க்கும்போது இரண்டு அம்சங்கள் தெளிவாகின்றன.

ஒன்று – இத்தகைய 'அறிவார்ந்த பிரகிருதிகளை'த்தான் தமக்கு மிக நெருக்கமாக வைத்து ஆட்சி அதிகாரத்தை கொண்டு நடத்தியிருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதனால்தான் இவ்வளவு குறுகிய காலத்தில் அதிகாரத்தையும் பதவியையும் விட்டு ஓடித் தப்ப வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தது – இவ்வாறாக பரமார்த்தகுருவின் சிஷ்யர்களைப் போன்ற அறிவு மேதைகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கும், தேசிய இனப் பிரச்சினைக்கும் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனாவும் தீர்வு காண வேண்டும்.

இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பிரச்சனை என்ற ஒன்றே இல்லை என்பதை கண்டுபிடித்த மிகப் பெரிய புத்திஜீவியை நாட்டின் பொலிஸ் துறை உட்பட முக்கிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமித்து, நாட்டை நிர்வகிக்க முயன்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்றோரின் அறிவு மட்டமும் கூட அதன் மூலம் அளவிடத்தக்கதுதான்.

இத்தகையோரை அரசியல் தலைவர்களாகத் தேர்வு செய்யும் பெரும் குற்றத்துக்காக மீண்டெழ முடியாத பெரும் பின்னடைவுக்குள் நாடு அமிழ்வதும், அதன் விளைவுகளை எதிர்கொள்வதும் தவிர்க்க முடியாத பேரவலங்களாக நாட்டுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுவது கூட நியாயமானது என்றே தோன்றுகின்றது.

## திருகோணமலை சாயி சேவா மத்திய நிலைய வளாகத்தில் சீரடி சாயிபாபா வெண்பளிங்கு திருவுருவ சிலை பிரதிஷ்டை







திருகோணமலை சாயி சேவா மத்திய நிலைய வளாகத்தில் சற்குரு சீரடி சாயி பாபாவின் வெண்பளிங்கு திருவுருவச் சிலை பிரதிஷ்டை வைபவத்தின் ஒரு முன்னோடி நிகழ்வாக கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாயி மந்திரி அனுசரணையுடன் திருமலை சாயிஸ்வரத்தில் பஜனையும் பூஜையும் இடம்பெற்றன.

கொழும்பு சீரடி சாயி மந்திரி பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் சீரடி பாபாவுக்கு பட்டு சாத்துவதையும், பூஜை நடைபெறுவதையும், திருமலை சாயி சேவா நிலையத்தின் தலைவரும் ஓய்வு நிலை அரசாங்க அதிபருமான டி.குலவீரசிங்கம், கொழும்பு சீரடி சாயி மந்திரி பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகனால் கௌரவிக்கப்படுவதையும் பஜனை நடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

# யாழ்.பொது நூலக கன்ரீனுக்குச் சீல்!




யாழ்ப்பாணம் பொது நூலக சிற்றுண்டிச் சாலை யாழ்.நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சீல் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை சிற்றுண்டி சாலை உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொது நூலகத்தில் இயங்கும் சிற்றுண்டி சாலை சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாக யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் கடந்த 09ஆம் திகதி சுகாதாரப் பரிசோதகர் சிற்றுண்டி சாலைக்கு சென்று சோதனைகளை மேற்கொண்டதுடன் , அங்கு காணப்பட்ட சில குறைபாடுகளை உரிமையாளருக்கு சுட்டிக்காட்டி , அதனை நிவர்த்தி செய்வதற்கு கடந்த 28ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டது.

அந்நிலையில் 28ஆம் திகதி மீள சென்று பரிசோதித்த போது , சுகாதார பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்படாமையால் , வியாழக்கிழமை சிற்றுண்டி சாலை உரிமையாளருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.


வழக்கு விசாரணையின் போது உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையால், உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்த நீதிவான் , சுகாதார பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் சிற்றுண்டி சாலைக்கு சீல் வைக்குமாறும் கட்டளையிட்டார். அதனை அடுத்து சிற்றுண்டி சாலை சுகாதார பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சனிக்கிழமை
01.10.2022

# ஆப்கானில் தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதல்; மாணவர்கள் உட்பட 32 பேர் சாவு: 40 பேர் காயம்







காபூல், ஒக்.01

ஆப்கானிஸ்தானில் கல்வி மையத்தில் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில், மாணவர்கள் உட்பட 32 பேர் உயிரிழந்தமையுடன் 40 பேர் காயம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து, ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆங்காங்கே மனித வெடிகுண்டு தாக்குதல், துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் சிறுபான்மையினரான ஹஸாராஸ் எனப்படும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்ற தலைநகர் காபூலில் தஷ்டி பர்சி பகுதியில், உயர் கல்வி மையம் ஒன்று உள்ளது. போட்டி தேர்வுகளுக்கு தயார் ஆகும் மாணவர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நேற்று காலை மாணவ - மாணவியர் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பயிற்சி வகுப்புகள் நடந்து கொண்டிருந்த போது, மையத்திற்குள் பயங்கரசத்தத்துடன் குண்டு வெடித்தது. கல்வி மையத்துக்குள் நுழைந்த தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர் தனது உடலில்


கட்டிக் கொண்டு வந்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்தார். அவை பயங்கரச் சத்தத்துடன் வெடித்து சிதறின. இதில் அந்த பகுதியே அதிர்ந்தது. குண்டு வெடிப்பில் கல்வி மையக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இந்தப் பயங்கரக் குண்டு வெடிப்பில் சிக்கி 32 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் நாற்பதுக்கும் அதிகமானோர் பலத்த காயம் அடைந்தனர்.

இதனிடையே குண்டு வெடிப்பு குறித்த தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தலீபான் வீரர்கள் அந்த பகுதியை சுற்றி வளைத்துத் தங்களின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தனர். பின்னர் அவர்கள் படுகாயம் அடைந்த நபர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தற்கொலைப்படை தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ். பயங்கரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்தது முதல் ஷியா பிரிவு முஸ்லிம்களை குறிவைத்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹிஜாப்புக்கு எதிரான போராட்டங்களில் ஈரானில் இரு வாரங்களில் 83 பேர் சாவு!

### இது வரையில் நூற்றுக்கணக்கானோர் கைது




தெஹ்ரான், ஒக்.01

ஈரானில் 22 வயதான மாா அமினி என்ற இளம்பெண் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக் கூறி கடந்த மாதம் 13 ஆம் திகதி பொலிஸார் கடுமையாக தாக்கியதில் உயிரிழந்தார்.


இச்சம்பவத்தை கண்டித்து ஈரானில் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். மாா அமினியின் சொந்த ஊரான சஹிஸ் நகரில் தொடங்கிய போராட்டம் மெல்ல மெல்ல நாட்டின் பிற பகுதிகளிலும் பரவத்தொடங்கியது. ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹிஜாப் எதிர்ப்பு போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரான் அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் மற்றும் ஸ்கைப், பேஸ்புக், டுவிட்டர், டிக்-டாக் மற்றும் டெலிகிராம் ஆகிய சமூக வலைதளங்கள் முடக்கப்பட்டு இணையதள சேவை தடை செய்யப்பட்டுள்ளது.

ஈரானில் ஹிஜாப்பிற்கு எதிராக போராட்டம் நடத்திய நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள், சீர்திருத்த ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2 வாரங்களாக நீடிக்கும் போராட்டத்தில் குறைந்தது 83 பேர் இறந்துள்ளனர். அதில் பெரும்பாலானோர் போராட்டக்காரர்கள் என்றும், போராட்டத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகம் என்றும் மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளமையுடன் கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன.

## புடின் மிரட்டலுக்கு நேட்டோ அஞ்சாது

### பைடன் திட்டவட்டம்



நியூயோர்க், ஒக்.01

ரஷ்ய அதிபர் புடின் மற்றும் அவரது பொறுப்பற்ற வார்த்தைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பயப்படப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

புடினின் செயல்பாடுகள் அவர் போராடிக்கொண்டிருப்பதற்கான அறிகுறியாகும். அவரால் அண்டை நாட்டின் நிலப்பரப்பைக் கைப்பற்றி அதிலிருந்து தப்பிக்க முடியாது. உக்ரைனுக்கு நாங்கள் தொடர்ந்து இராணுவ உதவிகளையும், ஆயுத உதவிகளையும் வழங்குவோம். நேட்டோ பிராந்தியத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாக்க அமெரிக்கா எங்கள் நேட்டோ நட்ப நாடுகளுடன் இணைந்து முழுமையாகத் தயாராக உள்ளது. எனவே மிஸ்டர் புடின், நான் சொல்வதை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நான் எங்கள் நட்பு நாடுகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறேன். இன்றும் புதிய தடைகளை அறிவிக்கிறோம் - என்றார்.

## ரஷ்யாவின் தாக்குதலில் 30 பொதுமக்கள் சாவு!



கீவ், ஒக்.01

உக்ரைனின் ஜபோரிஜியா நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது.

உக்ரைனின் ஜபோரிஜியா நகரில் ரஷ்யப் படைகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டனர், 28 பேர் காயமடைந்தனர் என முதல் கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில், அந்தத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது. 85க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான அறிவிப்பை ஜபோரிஜியா பிராந்திய கவர்னர் ஸ்டாருக் இணையதளம் வாயிலாக வெளியிட்டுள்ளார்.


ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை நோக்கி மக்கள் சென்ற வாகனங்கள் மீது குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. ரஷ்யப் படைகள் பொதுமக்கள் வாகனங்கள் மீது ராக்கெட் தாக்குதலைத் தொடுத்தன என்று அவர் கூறினார். இந்தக் கொடூர தாக்குதலில் சிக்கிய வாகனங்கள் தீப்பற்றி எரிவதையும், சாலையில் உடல்கள் கிடப்பதையும் படங்களில் காண முடிகிறது. எனினும், இது தொடர்பாக ரஷ்யத் தரப்பில் உடனடியாக எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

# காங்கிரஸ் தலைமைக்கு மும்முனைப் போட்டி மல்லிகார்ஜுன் கார்கேக்கு வெற்றிக்கு வாய்ப்பு

## எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகினார்







புதுடெல்லி,ஒக்.01

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட மல்லிகார்ஜுன் கார்கே, சசி தரூர் மற்றும் கே.என். திரிபாதி ஆகியோர் நேற்று ஒரே நாளில் வேட்புமனு தாக்கல் செய்தனர். காங்கிரஸ் மேலிடத்தின் அறிவுறுத்தலின் பேரில் மல்லிகார்ஜுன் கார்கே தலைவர் பதவிக்கு களம் இறங்கியுள் ளார். அதனால் அவருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்நிலையில், உதய்பூர் காங்கிரஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட 'ஒரு தலைவர், ஒரு பதவி' என்ற தீர்மானத்தின்படி, நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து, நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்த மல்லிகார்ஜுன் கார்கே, காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியா காந்திக்கு ராஜினாமா கடிதம் அனுப்பியுள்ளார். கார்கே பதவி விலகியதை தொடர்ந்து, மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ப சிதம்பரமும், திக்விஜய சிங்கும் போட்டியில் உள்ளனர்.

'ஜி-23' என்ற காங்கிரஸ் கட்சியின் அதிருப்திக் குழுவின் தலைவர்கள் பிரிதிவிராஜ் சவான், மணீஷ் திவாரி மற்றும் பூபிந்தர் ஹூடா ஆகியோர் தலைவர் பதவிக்கான போட்டியில் மல்லிகார்ஜுன் கார்கேவை ஆதரிப்பதாகக் கூறியுள்ளனர்.

# ரஷியாவுக்கு எதிரான பிரேரணையில் வாக்களிக்காமல் இந்தியா தவிர்ப்பு!



உக்ரைன் பிராந்தியங்கள் ரஷியாவுடன் இணைப்புக்கு எதிராக ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட பிரேரணை மீது வாக்களிக்காமல் இந்தியா புறக்கணித்தது.

உக்ரைனின் நான்கு பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்படுவதாக அதிபர் புடின் அறிவித்தார். உக்ரைன் பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைக்கும் திட்டத்திற்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்தார். உக்ரைனுடன் 7 மாதங்களுக்கு மேலாக போர் நீடித்துவரும் நிலையில் கைப்பற்றப்பட்ட 4 பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டு உள்ளன என மொஸ்கோவின் கிரெம்ளின் மாளிகையின் புனித ஜோர்ஜ் அரங்கில் அதிபர் புடின் அறிவித்துள்ளார். உக்ரைனில் உள்ள டானட்ஸ்க், லூகன்ஸ்க், ஸ்பெரெசியா, கெர்சன் ஆகிய பகுதிகளை இணைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுளளது.

இந்நிலையில், உக்ரைன் பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைத்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு வந்தது. ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரேரணையை நிராகரித்தது. இந்த பிரேரணைக்கு ஆதரவாக 10 நாடுகள் வாக்களித்தன. இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் பிரேரணையைப் புறக்கணித்தன.




# இந்தியாவில் 5ஜி சேவை இன்று மோடி தொடக்கி வைக்கின்றார்

இந்தியாவில் 5ஜி சேவை ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஏலம் கடந்த ஜூலை 26 ஆம் தேதி இணையதளம் வாயிலாக தொடங்கி 7 நாள்களாக 40 சுற்றுகளாக ஏலம் நடந்தது. இதில் ரிலையன்ஸ் ஜியோ, ஏர்டெல், வோடஃபோன் ஐடியா, அதானி குழுமத்தின் அதானி டேட்டா நெட்வர்க் ஆகிய 4 நிறுவனங்கள் பங்கேற்றன. மொத்தம் ரூ.1.50 லட்சம் கோடிக்கு 5ஜி ஸ்பெக்ட்ரம் ஏலம் போனது.

இந்நிலையில், டில்லி பிரகதி மைதானத்தில் இன்று நடக்கும் இந்திய மொபைல் மாநாட்டில், 5ஜி சேவையை பிரதமர் மோடி துவக்கி வைக்க உள்ளார். 5ஜி சேவை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் கிடைக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

# டயர் வெடித்து தடம் புரண்ட லொறி இருவர் சாவு; மூவருக்குப் படுகாயம்

முன்பக்கம் டயர் வெடித்ததால் சாலையோர பள்ளத்தில் லொறி கவிழ்ந்து 2 பேர் பலியானார்கள். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர். ஆந்திராவில் இருந்து கடப்பா கல் ஏற்றிக்கொண்டு வண்டலூர் நோக்கி லொறி ஒன்று நேற்று அதிகாலை வந்து கொண்டிருந்தது. லொறியின் பின்பக்கம் கடப்பா கற்கள் மீது ஆந்திராவைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிவாரெட்டி, வரதராஜீ ஆகியோர் அமர்ந்து பயணம் செய்தனர். லொறியை டிரைவர் லட்சுமணய்யா(வயது 36) ஓட்டினார். அவருடன் அவரது மகன் வாசு மற்றும் சுப்பா நாயுடு(50) ஆகியோர் லொறி யின் முன்பக்கம் அமர்ந்து வந்தனர். அதிகாலை 4.30 மணியளவில் சென்னை தாம்பரம் அடுத்த எருமையூர் செக்போஸ்ட் அருகே வண்டலூர்-மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் லொறி வந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென லொறியின் முன்புற வலது பக்க டயர் வெடித்தது. இதனால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லொறி தறிகெட்டு ஓடி, முடிச்சூர் அருகே சாலையோரம் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் லொறியின் பின்புறம் அமர்ந்து வந்த சிவாரெட்டி, வரதராஜீ ஆகியோர் கீழே விழுந்தனர். அவர்கள் மீது லாரியில் இருந்த கடப்பா கற்கள் விழுந்தன. இதில் கற்களுக்கு இடையே சிக்கிய 2 பேரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். லாரி டிரை வர் லட்சுமணய்யா, அவருடைய மகன் வாசு மற்றும் சுப்பா நாயுடு ஆகிய 3 பேரும் படுகாயம் அடைந்தனர்.



# வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்க பயிர் விதைகளும் பண உதவியும்



(நூருல் ஹுதா உமர்)

பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினால் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கான வீட்டுத் தோட்டம் செய்வதை ஊக்குவிக்கும் முகமாக பயிர் விதைப் பொதிகளும் தலா 10,000 ரூபா வீதம் உதவியும் காரைதீவில் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பி.ராஜகுலேந்திரன், பாதிப்புற்ற பெண்கள் அரங்க உத்தியோகத்தர்களான வ.இந்திராணி, ச.அன்னலெட்சுமி, காரைதீவு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா மோகன், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்கள் போன்றோரும் கலந்து கொண்டனர்.

## 57 பவுண் நகை, 10 லட்சம் ரூபா பணம் களுதாவளையில் புதனன்று கொள்ளை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு களுதாவளையில் கடை முதலாளி ஒருவரின் வீட்டில் நள்ளிரவில் உள்நுழைந்த மூகமூடி அணிந்த கொள்ளையர்கள் துப்பாக்கி மற்றும் கத்தி முனையில் 57 பவுண் தங்க நகைகள் மற்றும்10 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையத்துச் சென்ற சம்பவம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிசார் தெரிவித்தனர்.

களுதாவளை பிரதான வீதியிலுள்ள இந்த வீட்டில் கடை முதலாளி,அவரது தாய், சகோதரிகள் என நான்கு பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் போது நள்ளிரவு வீட்டின் ஜன்னலை உடைத்து வீட்டிற்குள் உள்நுழைந்த முகமூடி அனிந்த 4 பேர் கொண்ட கொள்ளையர்கள் வீட்டின் அறையில் நித்திரையில் இருந்த வர்களின் கழுத்தில் கத்தி மற்றும் துப்பாக்கிகளை வைத்து அவர்களைவ வீட்டின் மண்டபத்துக்கு அழைத்துவந்து சத்தம் போட்டால் கொல்லப்படுவீர்கள் என அச்சுறுதி அங்கு இருந்த 57 பவுண தங்க நகைகள் மற்றும் 10 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளார்.

பொலிசார் மேப்ப நாய்கள் வரவழைத்து தடவியல் மற்றும் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## வயலுக்குள் பயணித்த பஸ்







(காரை சகா)

பிரதான பாதையில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் திடீரெனப் பாதையை விட்டு விலகி அருகிலுள்ள வயலுக்குள் பாதுகாப்பாக பயணித்தது.

அம்பாறை சம்மாந்துறை பிரதான பாதையில் நேற்றுக் காலை பயணித்துக் கொண்டிருந்த அரச பஸ்ஸே பாதையை விட்டு விலகி வயலுக்குள் பாய்ந்துள்ளது.

இந்த விபத்து சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மல்வத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குக் காரணம் அதி வேகம் எனக் கூறப்படுகிறது.

சம்மாந்துறை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## வீடு உடைத்து மடிக்கணனியை திருடிய இரு சிறுவர்கள் கைது!

### காத்தான்குடியில் சம்பவம்



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பிரதேசத்தில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்த 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணனி ஒன்றை திருடிச் சென்ற 15,16 வயது இரு சிறுவர்களை நேற்று வெள்ளிக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் திருடப்பட்ட மடிக்கணனியை மீட்டுள்ளனர் எனவும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கர்ப்பலா பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பகல் வீட்டுக்காரர்கள் வீட்டைப் பூட்டிவிட்டுச் சென்ற சந்தர்பத்தில் வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்த அப்பிள் ரக மடிக்கணனி ஒன்றை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மடிகளணியைதிருடியவர்கள்என்றுகூறப்படும்அந்தபிரதேசத்தைச் சேர்ந் 15, 16 வயதுடைய இருசிறுவர்களை கைது செய்யப்பட்டனர். மடிக்கணனியும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை காத்தான்குடி பிரதேசத்தில் 180 மில்லிக்கிராம் ஐஸ்பேதை பொருளுடன் ஒருவரை நேற்று முன்தினம் இரவு பொலிசார் கைது செய்துள்ளனர்.

## கிழக்கு ஆளுநர் அலுவலகத்தில் வியாழன் சரஸ்வதி பூஜை நிகழ்வு





(பைசல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சரஸ்வதி பூஜை நிகழ்வு கடந்த வியாழனன்று திரு கோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர், ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொட்டகலை – போகாவத்த மாணவி தாக்குதல் தொடர்பில் அதிபர் கைது!

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டகலை - போகாவத்த பிரதேச பாடசாலையொன்றில் தரம் பத்தில்கல்விபயிலும்மாணவியொருவர், அதிபரின் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுடன் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் பாடசாலையின் அதிபர் திம்புள்ள பத்தனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

பாடசாலையில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ள ஆசிரியர் தின நிகழ்வுக்காக தனது சகோதரன் 300 ரூபா செலுத்தவில்லை எனத் தெரிவித்து, அதிபர் மாணவியின் சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதனையடுத்து 'சேர் எனது சகோதரனை தகாத வார்த்தைகளால் திட்ட வேண்டாம் என்றும் தனது தந்தை அருகில் வேலை செய்வதால் அவரிமிருந்து பணத்தை வாங்கித் தருவதாக' மாணவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே அதிபர் மாணவியை பிரம்பால் அமானுஷ்யமாக தாக்கினார் எனவும் இதனையடுத்து பாடசாலைக்கு அருகில் வேலை செய்துக்கொண்டிருந்த மாணவியின் தந்தை, மகளின் அலறல் கேட்டு, பாடசாலைக்கு ஓடி மாணவியைக் காப்பாற்றியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவியுடன் தனக்கு 4 குழந்தைகள் இருக்கிறார்கள் எனத் தெரிவித்த அத்தந்தை பொருளாதாரபிரச்சினையில் தான் இருப்பதுடன், தனது மனைவி வெளிநாட்டில் இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளதுடன், தனது மகள் தாக்கப்பட்டமை தொடர்பில் திம்புளபத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடையும் செய்துள்ளார்.

இந்தவிடயம்தொடர்பில்பாடசாலை அதிபரிடம் வினவியபோது, ஒழுக்கம் விடயமாகவே மேற்படி மாணவியை சிறு தடியொன்றினால் தாக்கினார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே மாணவியின் வாக்குமூலத்தின் பின் அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# 'நவீன சீதை' சிறுகதை நூலின் வெளியீடு திருகோணமலையில்

(ஹஸ்பர்)

கவிச்சுடர் சிவரமணியின் 'நவீன சீதை' சிறுகதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை அதிதியாக சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டுமையத்தின் நிறுவனர் பேராசிரியர் பால சுகுமாரும் சிறப்பு அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் சி. சிறிதரனும், கௌரவ அதிதியாக மூலோபாயக் கற்கை நிலையத்தின் பணிப்பாளர் ஆ.யதீந்திராவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் வரவேற்புரையை ஊடகவியலாளர் பாலேந்திரலிங்கம் விபூஷிதன் வழங்க, நூல் பிரதியை இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் நூல் ஆசிரியரிடம் இருந்து நூலைப் பெற்று வெளியீட்டு வைப்பார்.

நூலின் அறிமுக உரையை கவிஞர் க . யோகானந்தன் வழங்க, நயவுரையை ஆசிரியை சௌ. சந்திரகலா வழங்குவார்

நன்றியுரையை திருகோணமலை பொது நூலகத்தின் பிரதம நூலகர் க. வரதகுமார் நிகழ்த்த நிகழ்ச்சித் தொகுப்பை ஊடகவியலாளர் முகமட் புகாரி வழங்குவார்.

# யாழில். சுவிஸ் நாட்டவர்கள் தங்கியிருந்த வீடு உடைத்து 12 பவுண் நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து வீட்டில் இருந்த 12 பவுண் தங்க நகைகளை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சுவிஸ் நாட்டில் இருந்து வந்த குடும்பம் ஒன்று உரும்பிராய் கிழக்கு பகுதியில் வீடொன்றில் தங்கி இருந்துள்ளனர்.

அவர்கள் வியாழக்கிழமை ஆலயம் ஒன்றுக்கு சென்றிருந்த வேளை , வீட்டின்கதவுகளைஉடைத்துஉட்புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 12 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.




# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் மூக்குக் கண்ணாடி வழங்கல்!



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் பார்வைக் குறைபாடுடைய ஒருவருக்கு வில்லைகள் பொருத்திய மூக்குக் கண்ணாடி கழகத்தின் பதவியேற்பு நிகழ்வில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் கோரிக்கைக்கு அமைய கொழும்பு கிறான்ட்வே லயன்ஸ் கழக உறுப்பினரும் ரைற்றின் ஒப்ரிக்கல்ஸ் நிறுவன உரிமையாளருமான லயன் எஸ்.சந்திரசேகர் இந்த மூக்குக் கண்ணாடியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

சுன்னாகம்லயன்ஸ்கழகத்தின் பதவியேற்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட சிரேஷ்ட லயனும் கொமர்சியல் வங்கியின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய லயன் எஸ்.ரங்கநாதன் பயனாளிக்கு இந்த மூக்குக் கண்ணாடியை வழங்கிவைத்தார்.



# கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி. சிவசக்தி ஸ்ரீகாந்தராசா

தோற்றம் : 20.08.1963
மறைவு : 19.09.2022

அவர்கள் கடந்த (29.09.2022) வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து பாலாமணி தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்ற கந்தையா நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஸ்ரீகந்தராசாவின் பாசமிகு மனைவியும், தர்மநாயகி காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் குணாஈஸ்வரி, (மண்டைத்தீவு), நகுலேஸ்வரி (கிளிநொச்சி), அரங்கநாயகி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துணியும் ஸ்ரீவரதன் (சுவிஸ்), கஜந்தன் (லண்டன்), கிருசாந்தன் (லண்டன்), சுஜிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயரும் ரெஜீனா (சுவிஸ்), சுகன்யா (லண்டன்), நிலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றிவான், விகான், நிலான், லியா, லயா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று (அச்சுவேலி) வல்லை மயானத்தில் பூதவுடலானது தகனம் செய்யப்படவுள்ளது இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

அச்சுவேலி வடக்கு

தகவல்:- அன்பு கணவர் ஸ்ரீகந்தராசா (சிறி)
தெ.பே:- 077 8496546/07777 051 01 /+41 75 77487 433/+41 78 838 3727

## இணைய விளையாட்டால்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுத்து உயிரிழந்துள்ளனர் என்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

இதுதொடர்பில்ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமராட்சி பிரதேசத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் இரண்டு சிறுவர்கள் இணைய விளையாட்டுக்கு அடிமையான நிலையில் உயிரிழந்துள்ளனர்.

15 மற்றும் 14 வயதான இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 வயதான சிறுவன் இணைய விளையாட்டில் (ஒன்லைன் கேம்) தனது நண்பர்களுடன் ஈடுபட்டுள்ளான். அந்தச் சிறுவன் தோல்வியடைந்த நிலையில், அவனது நண்பர்கள் குறுஞ்செய்தி வழியாகக் கேலி செய்ததை அடுத்து தவறான முடிவெடுத்து உயிரி ழந்துள்ளான்.

14 வயதான சிறுவன் இணைய விளையாட்டில் ஈடுபட்டபோது தாயார் கண் டித்ததை அடுத்து தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான்.

இவர்கள் இருவரினதும் உயிர்கள் பறிக்கப்படுவதற்கு புறக்காரணிகள் சில இருந்தாலும் வீடியோ கேம் என்பதுதான் பிரதான காரணியாக உள்ளது. ஆதலால், பெற்றோர்கள் தமது சிறுவர்களின் நலனிலும் அவர்களின் செயற்பாடுகளிலும் அதீத அக்கறையுடன் செயற்பட வேண்டும் – என்றார்.

## தமிழ்க் குழந்தைகள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?, எங்கள் உறவுகளுக்கு நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்பட வேண்டும், இலங்கையில் போர்க் குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துங்கள், 5 வயது சின்னஞ்சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?, பாடசாலை சென்ற மாணவன் எங்கே? போன்ற பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினார்கள்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## வீழ்ச்சிப் பாதையில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது நிலையான அரசு இல்லை.

அதுதான் அதிலிருந்து நாம் வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுகின்றோம்.

நாடு மீண்டெழ வேண்டுமெனில் நிலையான அரசு ஆட்சியில் இருக்க வேண்டும்.

எனவே, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முதலில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும்.

அப்போதுதான் மக்களின் தற்போதைய மனநிலையை அறிந்துகொள்ள முடியும் – என்றார்.

## நடுத்தெருவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் உள்ளது. அது மாத் திரமல்லாது ஏனைய வலய நாடுகளின் மத்தியில் எமது நாடு மந்த போசனை மட்டத்தை எட்டி யுள்ளது. இதற்குப் பிரதான காரணம் பொருளாதார நெருக்க டியாகும்.

பொருளாதாரம் பாரிய அளவில் வீழ்ச்சி கண்ட நாடாக எமது நாடு ஆக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதற்குத் தீர்வு குறித்து வினவும்போது சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரமே எம் முடைய நாடு எதிர்பார்த்துள்ளது.

மாறாக நாட்டினுள் பொருளாதா ரத்தை மேம்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியம் எப்போது அந்தப் பணத்தைத் தந்துதவும் என்ற கால எல்லையும் இல்லை. இந்தநிலையில் நாட்டில் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்று வருகின்றன. ஆனால், அதனைத்தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

நாம்ஜெனிவாஅமர்வில்கலந்துகொண்டோம். அதன்போது மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி ஆக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாம் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைக் கேட்டாலும் கூட சர்வதேசத்தின் உதவி எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கு ஏற்ற சூழல் எம்முடைய நாட்டில் உள்ளதாகத் தெரியவில்லை – என்றார்.

## தமிழ் மக்களுக்கென்று.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை, தொடர்ச்சியாகத் தமிழ் மக் களை ஏமாற்றாமல், பேச்சுக்களை இதயசுத் தியுடன் அரசு நடத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

இந்த மூன்று தலைவர்களினதும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையி லேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பிரச்சினைகள் என்றால் அது தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. இந்த நாட்டில் தமிழ் மக்கள் மட்டுமா வாழ்கின்றார் கள்? மூவின மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருக்கின்றன. அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. முதலில் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

தேசிய பேரவையில் இணையமாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்கும் சம்பந்தன் குழுவினர், தமிழ் மக்களின் பிரச்சினைக ளுக்கு அரசியல் தீர்வைக் காணும் பேச்சுக்களை இதயசுத்தியுடன் அரசு நடத்த வேண்டும் என்று எப்படிக் கூறமுடியும்?

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் இல்லை. அவர்கள் நாட்டில் 24 மணிநேரமும் சுதந்திரமாக நடமாட முடியும். எங்கும் செல்லலாம்; எங்கும் குடியேறலாம்; எங்கும் வழிபடலாம். ஆனால், சிங்கள மக்களுக்கு எதிராகவும், பௌத்த மதத்துக்கு எதிராகவும்தான் தமிழ் மக்கள் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் சிங்கள – பௌத்த மக்கள் குடியேறவோ அல்லது வழிபடவோ முடியாத நிலைமையை தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்படுத்தி வருகின்றார்கள். தமிழ் மக்கள் தாமாகவே பிரச்சினைகளைத் தேடுகின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், அதற் கான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் வெளிவரும் செய்திகளை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2022இல் வெளியிடப்பெற்றது.